FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under section 173 BNSS

C 8319431

1. District : மாவட்டம் **கடலூர்** PS: காவல்நிலையம் **ஊ.த.க. பிரிவு** Year: ஆண்டு **2025** FIR No. மு.த.அ. எண் **13/2025** Date: நாள் **18.12.2025**

2. (i) Act சட்டம்: **Indian Penal Code** Sections பிரிவுகள்: **420, 468 & 471**
(ii) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The Prevention Corruption (Amendment) Act 2018** Sections பிரிவுகள்: **13(1)(a) r/w 13(2)**
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **15.11.2019** Date to : நாள் வரை **28.08.2022**
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **18.12.2025** Time : நேரம் **1800 hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - IV** Time : நேரம் **1800 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **விசாரணை முடிவின் அடிப்படையில், சுய முனைப்பில் புகார் தாக்கல் செய்யப்படுகிறது.**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **தனி துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) அலுவலகம், கடலூர் மற்றும் தனி வட்டாட்சியர் (முத்திரைத்தாள்) அலுவலகம், விழுப்புரம்**
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **ச.சுந்தரராஜ்** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **50** (d) Nationality : நாட்டினம் **இந்தியன்** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் **காவல் ஆய்வாளர்** (g) Address : முகவரி **ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) ஜெ.ஜெயகுமார், முன்னாள் தனி துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்), கடலூர்.
2) வெ.சுந்தர்ராஜன், முன்னாள் தனி வட்டாட்சியர், (முத்திரைத்தாள்), விழுப்புரம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

PE 7/2025/REV/CL விசாரணை செய்யப்பட்டது

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, முதல்நிலை விசாரணை எண். PE 7/2025/REV/CL நாள் 28.01.2025 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் முடிவில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில், குற்ற வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருப்பது தெரிய வந்ததால், குற்றச்சாட்டில் தொடர்புடைய அரசு அலுவலர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய தகுந்த அலுவலரிடம் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி பக்கம் -3)

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed P. Ambalagan Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

18/12/25

15 Date & Time of despatch to the court: 18.12.2025 at 18.45 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. Sundararaj
Rank: நிலை ..... No. எண்
காவல் ஆய்வாளர்
ஊ.த.க. பிரிவு கடலூர்.

முதல்நிலை விசாரணையின் விபரம் பின்வருமாறு :-

1-ம் எதிரி திரு.J.ஜெயக்குமார் என்பவர் கடந்த 02.04.2018 முதல் 30.06.2019 வரையிலும் மீண்டும் 01.06.2020 முதல் 13.07.2022 வரையிலும் கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட தனித்துறை ஆட்சியர் (முத்திரைத்தாள்) ஆக பணிபுரிந்துள்ளார். இவரது அலுவலகம் கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ளது.

2-ம் எதிரி திரு.V.சுந்தர்ராஜன் என்பவர் தனி வட்டாட்சியர் (முத்திரைத்தாள்) ஆக விழுப்புரம் மாவட்டத்தில் பணிபுரிந்துள்ளார்.

மேற்கண்ட எதிரிகள் இருவரும் 1988-ம் ஆண்டின் ஊழல் தடுப்புச்சட்டம் (திருத்தம் 2018) பிரிவு 2(c) ன்படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

1 மற்றும் 2-ம் எதிரிகள் மேற்கண்ட தங்களது பணிக்காலத்தில் தமிழ்நாடு முத்திரை (ஆவணங்களின் மதிப்பைக் குறைத்து மதிப்பிடுவதைத் தடுத்தல்) விதிகள், 1968.-ல் குறிப்பிட்டுள்ள விதிகளை மீறி, ஆவணதாரருக்கு சாதகமாக சொத்து மதிப்பு மற்றும் முத்திரை தீர்வை கட்டணத்தை குறைத்து நிர்ணயம் செய்து உத்தரவிட்டு அரசுக்கு பெரும் அளவில் பண இழப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

குற்றச்சாட்டு-1 - ஆவண.எண்.2069/2022 – இணை-I கள்ளக்குறிச்சி சார் பதிவாளர் அலுவலகம்

கடந்த 17.08.2022ந் தேதி இணை –I கள்ளக்குறிச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்:2069/2022 ஆனது, திரு.க.வெங்கடேசன் த/பெ கண்ணுசாமி ஏமப்பேர் என்பவரிடமிருந்து திரு.வே.குணசீலன் த/பெ வேல்முருகன் கள்ளக்குறிச்சி என்பவர் ஏமப்பேர் கிராம சர்வே எண்-101/1B, 101/2B ல் 3778 சதுரடி காலி மனையை ரூ.9,00,000/-க்கு கிரையம் பெற்றுள்ளார்.

18/12/25

மேற்படி ஆவண பதிவின்போது முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.63,000/- செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட சர்வே எண்ணிற்கான அரசு வழிகாட்டி மதிப்பு சதுரடி ரூ.1005/- என்றும், மேற்படி 3778 சதுரடி காலி மனையின் மொத்த மதிப்பு ரூ.37,96,890/- என்றும், அதற்குண்டான 7% அரசு நிர்ணயம் செய்யப்பட்ட முத்திரை தீர்வை தொகை ரூ.2,65,782/-என்றும் அப்போதைய சார் பதிவாளர் திரு.சிவக்குமார் என்பவர் நிர்ணயம் செய்ததை ஏற்றுக்கொள்ளாத ஆவணதாரர் இந்திய முத்திரை சட்டம் பிரிவு 47A(1) ன் கீழ் தனித்துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) கடலூர் அவர்களிடம் 17.08.2022ந் தேதி விண்ணப்பித்துள்ளார்.

கடந்த 14.07.2022ந் தேதி முற்பகல் பணிமாறுதலில் சென்ற எதிரி 1-திரு.ஜெ.ஜெயக்குமார் என்பவர் மேற்கண்ட ஆவணத்தை கள்ளக்குறிச்சி இணை –I சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து நேரடியாக பெற்று மேற்படி சொத்தின் மதிப்பை அரசு நிர்ணயித்த தொகையை விட குறைவாக ரூ.11,33,400/- என்று நிர்ணயித்து, அதற்குண்டான 7% முத்திரை தீர்வை கட்டணம் ரூ.79,338/- என்று நிர்ணயித்து, ஏற்கனவே ஆவணதாரர் ரூ.63000/- செலுத்தி உள்ளதால் மீதம் ரூ.16,500/- ஆக முத்திரை தீர்வை கட்டணம் வசூலிக்க பரிந்துரை செய்து போலியான உத்தரவு ஆணை எண்-M.R.NO:250/2022 Dt:28.08.2022ன்படி பிறப்பித்து, 01.09.2022ந் தேதி இணை-I கள்ளக்குறிச்சி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளார். இதன் மூலம் அரசுக்கு ரூ.1,86,283/- இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

எதிரி-1 திரு.ஜெ.ஜெயக்குமார் அவர்களின் ஆணை எண். M.R.NO:250/2022 Dt:28.08.2022ன்படி சம்மந்தமாக சிறப்பு பதிவேடு (Master Register) ஆய்வு செய்ததில், மேற்படி M.R.எண்.250/2022 இணை –I கள்ளக்குறிச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.1745/2022 க்கு வழங்கப்பட்டுள்ளது என தெரிய வருகிறது. எனவே எதிரி-1 பணிமாறுதலில் சென்ற பிறகு 28.08.2022ந் தேதி மேற்படி M.R. எண்.250/2022-ஐ பயன்படுத்தி போலியான உத்தரவு பிறப்பித்து மோசடி செய்துள்ளார்.

18/12/25

இதுதொடர்பாக கடந்த 19.12.2022ந் தேதி செல்வி.கீதா தனித்துணை ஆட்சியர் முத்திரைத்தாள் அவர்கள் பதிவுத்துறை தலைவர் அவர்களுக்கு புகார் அனுப்பியதன் பேரில் பதிவுத்துறைத்தலைவர் அவர்கள் க.எண்-45641/இ1/2022/நாள் 22.12.2022ன்படி திரு.ஜெயக்குமார் என்பவர் மேற்கண்ட ஆவண எண்- 2069/2022 உட்பட ஏழு ஆவணங்கள் மீது பிறப்பித்த ஆணைகளை ரத்து செய்துள்ளார்.

அதன் பின்னர் சி.கீதா, தனித்துணை ஆட்சியர் முத்திரைத்தாள் அவர்கள் செயல்முறை ஆணை எண்-444/2022 நாள்-10.02.2023 ன்படி ஆவண எண்- 2069/2022 -ன் சொத்து மதிப்பு ரூ.37,96,890/- என்று நிர்ணயித்து ஆணை பிறப்பித்து அதன்படி ஆவண எண்-2069/2022க்கு 7% முத்திரை தீர்வை கட்டணம் ஏற்கனவே செலுத்தியது போக 10.02.2023ந் தேதி ரூ.1,86,283/- இணை-I கள்ளக்குறிச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் வசூலிக்கப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டு-2 - ஆவண எண்.3638/2022 - இணை-II கள்ளக்குறிச்சி சார் பதிவாளர் அலுவலகம்

கடந்த 28.07.2022ந் தேதி இணை -II கள்ளக்குறிச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்:3638/2022 ஆனது. காலம்சென்ற திரு.இளையாழ்வார் என்பவரது வாரிசுகள் அவர்களுக்கு சொந்தமான கள்ளக்குறிச்சி கிராம சர்வே எண்-282/2A, 282/3, 282/4A1A ல் 23762 சதுரடி நிலத்தை ரூ.54,00,000/-க்கு திரு.சுந்தரமூர்த்தி த/பெ துரைசாமி, அம்மையகரம், சின்னசேலம், திரு.வெங்கடேஷ் த/பெ ரங்கராஜலு, கள்ளக்குறிச்சி மற்றும் திருதமிழழகன் த/பெ அண்ணாமலை, கள்ளக்குறிச்சி ஆகியோர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளனர்.

மேற்படி ஆவணம் பதிவு செய்ய முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.3,78,000/- செலுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட சர்வே எண்ணிற்கான அரசு வழிகாட்டி மதிப்பு சதுரடி ரூ.3,350/- என்றும், மேற்படி 23762 சதுரடி நிலத்திற்கு அரசு மதிப்பீடு படி கிரைய தொகை ரூ.7,96,02,700/- என்றும், அதற்குண்டான முத்திரை தீர்வை கட்டணம் ரூ.55,72,189/- செலுத்த வேண்டும் என்று அப்போதைய பொறுப்பு சார்

18/12/25

பதிவாளர் திருகதிரவன் என்பவர் நிர்ணயம் செய்ததை ஏற்றுக்கொள்ளாத ஆவணதாரர் இந்திய முத்திரை சட்டம் பிரிவு 47A(1) ன் கீழ் தனித்துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) கடலூர் அவர்களிடம் விண்ணப்பித்துள்ளார்.

கடந்த 14.07.2022ந் தேதி முற்பகல் பணிமாறுதலில் சென்ற எதிரி 1-திரு.ஜெ.ஜெயக்குமார் மேற்கண்ட ஆவணத்தை கள்ளக்குறிச்சி இணை-II சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து நேரடியாக பெற்று மேற்படி ஆவணத்தின் சொத்து மதிப்பு ரூ.71,28,600/- என்றும், அதற்குண்டான 7% முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.4,99,002/- என்றும் ஆவணதாரர் ஏற்கனவே ரூ.3,78,000/- செலுத்திவிட்டதால் மீதமுள்ள தொகை ரூ.1,21,100/- மட்டும் செலுத்தினால் போதும் என்று செயல்முறை ஆணை சி.ப.எண்-245/2022 நாள்-28.08.2022 அனுப்பியுள்ளார். அதன் அடிப்படையில் ஆவணதாரர் 01.09.2022ந் தேதி ரூ.1,21,100 செலுத்தியுள்ளார்கள்.

எதிரி-1 திரு.ஜெ.ஜெயக்குமார் அவர்களின் ஆணை எண். M.R.NO:245/2022 Dt:28.08.2022ன்படி சம்மந்தமாக சிறப்பு பதிவேடு (Master Register) ஆய்வு செய்ததில், மேற்படி சி.ப.எண்.245/2022 புதுச்சத்திரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.390/2022 க்கு வழங்கப்பட்டுள்ளது என தெரிய வருகிறது. எனவே எதிரி-1 பணிமாறுதலில் சென்ற பிறகு 28.08.2022ந் தேதி மேற்படி சி.ப.எண்.245/2022-ஐ பயன்படுத்தி போலியான உத்தரவு பிறப்பித்து மோசடி செய்துள்ளார்.

எதிரி-1 திரு.ஜெ.ஜெயக்குமார் அதிகார வரம்பை மீறியும் முறையற்ற வகையிலும் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவினால் அரசுக்கு ரூ.50,73,187/- இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

குற்றச்சாட்டு-3 - ஆவண.எண்.2075/2022 – இணை-II கள்ளக்குறிச்சி சார் பதிவாளர் அலுவலகம்

கடந்த 06.05.2022ந் தேதி இணை -II கள்ளக்குறிச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்:2075/2022 ஐ, திரு.பெரியசாமி த/பெ

18/12/25

கோவிந்தசாமி, அரியபெருமானூர் மற்றும் திருமதி.சரளா க/பெ குமரேசன் ஆகியோர்கள் திருமதி.குர்ஷித் க/பெ தாஜீதீன், கள்ளக்குறிச்சி, திருமதியாஸ்மின் க/பெ முகமது கவுஸ், கள்ளக்குறிச்சி, திருமதி.நர்கீஸ் க/பெ பாதுஷா (லேட்), கள்ளக்குறிச்சி, மைனர் ரிகானா மற்றும் முகமது ஆசிக் ஆகியோரிடமிருந்து கள்ளக்குறிச்சி கிராம சர்வே எண்.84/9, 84/13A1A1Aல் 14 சென்ட் நிலத்தை ரூ.2,00,000/-க்கு கிரையம் பெற்றுள்ளனர்.

மேற்படி ஆவணம் பதிவு செய்ய முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.14,000/- செலுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட சர்வே எண்ணிற்கான அரசு வழிகாட்டி மதிப்பு சதுரடி ரூ.636/- என்றும், மேற்படி 14 சென்ட் (6104 சதுரடி) நிலத்திற்கு அரசு மதிப்பீடு படி கிரைய தொகை ரூ.38,82,144/- என்றும், அதற்குண்டான 7% முத்திரை தீர்வை கட்டணம் ரூ.2,57,754/- செலுத்த வேண்டும் என்று அப்போதைய சார் பதிவாளர் திருதாமோதரன் என்பவர் தனிதுணை ஆட்சியர் (முத்திரை) கடலூர் அவர்களுக்கு ஆவணத்துடன் கூடிய பரிந்துரையை 10.05.2022ந் தேதி பதிவு தபால் மூலம் அனுப்பியுள்ளார்.

அந்த பரிந்துரையுடன் கூடிய ஆவணத்தை திரு.ஜெ.ஜெயக்குமார், கடலூர் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அவர்கள் பெற்று மேற்படி ஆவணத்தின் சொத்து மதிப்பு ரூ.3,78,000/- என்றும், அதற்குண்டான 7% முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.26,460/- என்றும், ஆவணதாரர் ஏற்கனவே ரூ.14,000/- செலுத்திவிட்டதால் மீதமுள்ள தொகை ரூ.12,500/- மட்டும் செலுத்தினால் போதும் என்று செயல்முறை ஆணை சிய.எண். 161/2022-ஐ பணியிலிருந்து 14.07.2022ந் தேதி விடுவிக்கப்பட்ட பிறகு 28.08.2022ந் தேதி உத்தரவு வழங்கியுள்ளார். அதன் அடிப்டையில் ஆவணதாரர் 01.09.2022ந் தேதி ரூ.12,500/- செலுத்தியுள்ளார்.

ஜெயக்குமார் அதிகார வரம்பை மீறியும் முறையற்ற வகையிலும் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவினால் அரசுக்கு ரூ.2,31,254/- இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

18/12/25

குற்றச்சாட்டு-4 - ஆவண.எண்.2246/2022 – மணலூர்பேட்டை சார் பதிவாளர் அலுவலகம்

கடந்த 14.07.2022ந் தேதி மணலூர்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்:2246/2022 ஆனது, காலம்சென்ற பாலகிருஷ்ணன் குமாரர்கள் திரு.ரங்கநாதன், திரு.ஆறுமுகம் மற்றும் ஏழுமலை ஆகியோர்கள் அவர்களுக்கு சொந்தமான மணலூர்பேட்டை கிராம சர்வே எண்-62/2B1A-77 சென்ட், நிலத்தை ரூ.3,31,000/-க்கு திரு.முகமது அன்சர் குமாரர் ஜுபேர் அகமது, திருவண்ணாமலை, என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளனர். மேற்படி ஆவணம் பதிவு செய்ய முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.16,170/- செலுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அப்போது பணியிலிருந்த சார் பதிவாளர் திரு.நாகராஜன் அவர்கள் ரூ.7,71,981/- இழப்பீடு முத்திரை தீர்வை தொகை என்று கணக்கீடு செய்து அனுப்பியதை பணியிலிருந்து 14.07.2022ந் தேதி விடுவிக்கப்பட்ட திரு.ஜெ.ஜெயக்குமார் பெற்று மேற்படி ஆவணத்தின் சொத்து மதிப்பு ரூ.11,55,000/- என்றும் அதற்குண்டான 7% முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.80,850/- என்றும் ஆவணதாரர் ஏற்கனவே ரூ.16,170/- செலுத்திவிட்டதால் மீதமுள்ள தொகை ரூ.65,000/- மட்டும் செலுத்தினால் போதும் என்று செயல்முறை ஆணை சி.ப.எண்.241/2022 நாள்-15.07.2022 அனுப்பியுள்ளார். அதன் அடிப்டையில் ஆவணதாரர் 25.07.2022ந் தேதி ரூ.36,960/- செலுத்தியுள்ளார்கள்.

எதிரி-1 திரு.ஜெ.ஜெயக்குமார் அவர்களின் ஆணை எண். M.R.NO:241/2022 Dt:28.08.2022ன்படி சம்மந்தமாக சிறப்பு பதிவேடு (Master Register) ஆய்வு செய்ததில், மேற்படி சி.ப.எண்.241/2022 மண்ணார்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.2147/2022க்கு வழங்கப்பட்டுள்ளது என தெரிய வருகிறது. எனவே எதிரி-1 பணிமாறுதலில் சென்ற பிறகு 28.08.2022ந் தேதி மேற்படி சி.ப.எண்.241/2022-ஐ பயன்படுத்தி போலியான உத்தரவு பிறப்பித்து மோசடி செய்துள்ளார்.

18/12/24

எதிரி -1 திரு.ஜெ.ஜெயக்குமார் அதிகார வரம்பை மீறியும் முறையற்ற வகையிலும் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவினால் அரசுக்கு ரூ.6,91,131/- இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

குற்றச்சாட்டு-5 - ஆவண.எண்.2370/2022 – மணலூர்பேட்டை சார் பதிவாளர் அலுவலகம்

கடந்த 26.07.2022ந் தேதி மணலூர்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்:2370/2022 ஐ, திரு.ரங்கநாதன் த/பெ தங்கவேலு முதலியார், காங்கியனூர் என்பவர் அவரது மகன் திரு.ராஜசேகர் என்பவருக்கு காங்கியனூர் கிராம சர்வே எண்-14/4A2, 14/4C ல் 80.62 சென்ட் ரூ.2,37,250/- மதிப்புள்ள நிலத்தை தானசெட்டில்மென்டாக கொடுத்துள்ளார். மேற்படி ஆவணம் பதிவு செய்ய முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.2,373/- செலுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அப்போது பணியிலிருந்த சார் பதிவாளர் திரு.நாகராஜன் அவர்கள் ஏக்கருக்கு ரூ.19,16,626/- என்று அரசு சொத்து மதிப்பு பரிந்துரை செய்து கடலூர் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அவர்களுக்கு அனுப்பியதை பணியிலிருந்து 14.07.2022ந் தேதி விடுவிக்கப்பட்ட திரு.ஜெயக்குமார் பெற்று மேற்படி ஆவணத்திலுள்ள 80.62 சென்ட் இடத்திற்கான சொத்து மதிப்பு ரூ.5,64,340/- என்றும், அதற்குண்டான 1% முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.5,793/- என்றும், ஆவணதாரர் ஏற்கனவே ரூ.2,373/- செலுத்திவிட்டதால் மீதமுள்ள தொகை ரூ.3,500/- மட்டும் செலுத்தினால் போதும் என்று செயல்முறை ஆணை சி.ப.எண்- 247/2022 நாள்- 27.08.2022 அனுப்பியுள்ளார். அதன் அடிப்படையில் ஆவணதாரர் 01.09.2022ந் தேதி ரூ. 3,500/- செலுத்தியுள்ளார்.

எதிரி-1 திரு.ஜெ.ஜெயக்குமார் அவர்களின் ஆணை எண். M.R.NO:247/2022 Dt:27.08.2022ன்படி சம்மந்தமாக சிறப்பு பதிவேடு (Master Register) ஆய்வு செய்ததில், மேற்படி சி.ப.எண்.247/2022 இணை-II கள்ளக்குறிச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.3101/2022க்கு வழங்கப்பட்டுள்ளது என தெரிய வருகிறது. எனவே எதிரி-1 பணிமாறுதலில் சென்ற பிறகு 27.08.2022ந்

18/12/25

தேதி மேற்படி சி.ப.எண்.247/2022-ஐ பயன்படுத்தி போலியான உத்தரவு பிறப்பித்து மோசடி செய்துள்ளார்.

எதிரி 1-திரு.ஜெ.ஜெயக்குமார் அதிகார வரம்பை மீறியும் முறையற்ற வகையிலும் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவினால் அரசுக்கு ரூ.9,808/- இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

குற்றச்சாட்டு-6 - ஆவண.எண்.1956/2022 – மணலூர்பேட்டை சார் பதிவாளர் அலுவலகம்

கடந்த 22.06.2022ந் தேதி மணலூர்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்:1956/2022 ஐ, திரு.ஏகாம்பரம் த/பெ கோவிந்தசாமி, சொரையபட்டு, என்பவர் சொரையபட்டு கிராம சர்வே எண்-7/3-ல் 46 சென்ட் நிலத்தை திரு.ஏழுமலை த/பெ அல்லிமுத்து, கொழுந்திராம்பட்டு என்பவருக்கு ரூ.1,05,173/-க்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி ஆவணம் பதிவு செய்ய முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.7,364/- செலுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அப்போது பணியிலிருந்த சார் பதிவாளர் திரு.நாகராஜன் அவர்கள் சதுரடிக்கு ரூ.33/- என பரிந்துரை செய்து அப்போதைய கடலூர் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அவர்களுக்கு அனுப்பியதை திரு.ஜெயக்குமார் பெற்று மேற்படி ஆவணத்தின் சொத்து மதிப்பு ரூ.2,30,000/- என்றும், அதற்குண்டான 7% முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.16,100/- என்றும், ஆவணதாரர் ஏற்கனவே ரூ.7,364/- செலுத்திவிட்டதால் மீதமுள்ள தொகை ரூ.8,800/- மட்டும் செலுத்தினால் போதும் என்று செயல்முறை ஆணை சி.ப.எண்- 240/2022 ஐ 14.07.2022ந் தேதி பிறப்பித்துள்ளார். மேலும் எதிரி-1 திரு.ஜெயக்குமார் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு கடந்த 18.07.2022ந் தேதி மணலூர்பேட்டை சார்பதிவாளருக்கு குறைவு முத்திரை கட்டணம் வசூலிக்கப்பட்டதாகவும், ஆவணத்தை ஆவணதாரரிடம் வழங்குமாறு கடிதம் அனுப்பியுள்ளார்.

18/12/25

எதிரி-1 திரு.வி.ஜெயக்குமார் அவர்களின் ஆணை எண். M.R.NO:240/2022 Dt:14.07.2022 சம்மந்தமாக சிறப்பு பதிவேடு (Master Register) ஆய்வு செய்ததில், மேற்படி M.R.எண்.240/2022 மண்ணார்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.2088/2022க்கு வழங்கப்பட்டுள்ளது என தெரிய வருகிறது. எனவே எதிரி-1 **திரு.ஜெயக்குமார்** மேற்படி M.R. எண்.240/2022-ஐ பயன்படுத்தி போலியான உத்தரவை முன்தேதியிட்டு பிறப்பித்து மோசடி செய்துள்ளார் என தெரிய வருகிறது.

எதிரி-1 திரு.ஜெயக்குமார் அதிகார வரம்பை மீறியும் முறையற்ற வகையிலும் பிறப்பித்த உத்தரவினால் அரசுக்கு ரூ.30,229/- இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

குற்றச்சாட்டு-7 - ஆவண எண்.2259/2022 – மணலூர்பேட்டை சார் பதிவாளர் அலுவலகம்

கடந்த 15.07.2022ந் தேதி மணலூர்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண் 2259/2022 ஆனது, திருக்கோவிலூர் வட்டம் சித்தப்பட்டணம் கிராமத்தில் வசிக்கும் திருடில்லி நாயுடு. த/பெ சடகோபால் நாயுடு என்பவரிடமிருந்து மணலூர்பேட்டை திரு.சிவராமகிருஷ்ணன் த/பெ குமார் மற்றும் திரு.தளபதி த/பெ குமார் ஆகியோர் செல்லங்குப்பம் கிராம சர்வே எண்-8.3E1-ல் 15 சென்ட் நிலத்தை ரூ.45,710/-க்கு கிரையம் பெற்றது பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான முத்திரை தீர்வை கட்டணமாக ரூ3,206/- செலுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அப்போது பணியிலிருந்த சார் பதிவாளர் திரு.நாகராஜன் அவர்கள் சொத்து மதிப்பு Hectare ரூ72,50,000/- என்று கணக்கீடு செய்து அதற்குண்டான இழப்பீட்டு தொகை ரூ.27,244/- என்று பரிந்துரை செய்ததை பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட எதிரி-1 திரு.ஜெ.ஜெயக்குமார், நேரடியாக ஆவணங்களை பெற்று மேற்படி ஆவணத்தின் சொத்து மதிப்பு ரூ.45,780/- என்றும், அதற்குண்டான 7% முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.3205/- என்றும், ஆவணதாரர் ஏற்கனவே ரூ.3,206/- செலுத்திவிட்டதால் குறைவு முத்திரை தீர்வை கட்டணம்

18/11/25

செலுத்த தேவையில்ல என்று செயல்முறை ஆணை சி.ப.எண்- 243/2022 நாள்- 15.07.2022 ன்படி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

எதிரி 1-திரு.ஜெ.ஜெயக்குமார் அதிகார வரம்பை மீறியும் முறையற்ற வகையிலும் பிறப்பித்த உத்தரவினால் அரசுக்கு ரூ.24,000/- இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

குற்றச்சாட்டு 8 - ஆவண.எண்.2372/2022 – மணலூர்பேட்டை சார் பதிவாளர் அலுவலகம்

கடந்த 25.07.2022ந் தேதி மணலூர்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்:2372/2022 ஆனது, திருக்கோவிலூர் வட்டம் காங்கியனூர் கிராமத்தில் வசிக்கும் திருதரங்கநாதன் த/பெ தங்கவேல் முதலியார் என்பவர் அவரது மகன் திரு.ர.ராஜீவ்காந்தி என்பவருக்கு காங்கியனூர் கிராம சர்வே எண்-14/4A2, 14/4C, -ல் 94.38 சென்ட் நிலத்தை தான செட்டில்மென்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்தின் மதிப்பு ரூ.2,82,750/- என்றும், முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.2,900/- செலுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அப்போது பணியிலிருந்த சார் பதிவாளர் திரு.நாகராஜன் அவர்கள் சொத்து மதிப்பு ரூ.19,16,626/- என்றும் அதற்குண்டான இழப்பீட்டு தொகை ரூ.15,410/- என்று பரிந்துரை செய்ததை, 14.07.2022ம் தேதி பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட எதிரி-1 திரு.ஜெயக்குமார் நேரடியாக பெற்று மேற்படி ஆவணத்தின் சொத்து மதிப்பு ரூ.6,75,660/- என்றும், அதற்குண்டான 1% முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.6,756/- என்றும், ஆவணதாரர் ஏற்கனவே ரூ.2,900/- செலுத்திவிட்டதால் மீதமுள்ள தொகை ரூ.4,000/- மட்டும் செலுத்தினால் போதும் என்று போலியாக செயல்முறை ஆணை சி.ப.எண்-248/2022 நாள்-27.08.2022 என்று பிறப்பித்துள்ளார். அதன்படி ஆவணதாரரிடமிருந்து 01.09.2022 ந் தேதி ரூ.4,000/- வசூலிக்கப்பட்டுள்ளது.

எதிரி 1-திருஜெயக்குமார். அதிகார வரம்பை மீறியும் முறையற்ற வகையிலும் பிறப்பித்த உத்தரவினால் அரசுக்கு ரூ.8,528/- இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

18/12/25

குற்றச்சாட்டு-9 - ஆவண.எண்.608/2017 – தியாகதுருகம் சார் பதிவாளர் அலுவலகம்

கடந்த 07.04.2017 ஆம் தேதி தியாகதுருகம் சார் பதிவாளர் அலுவலத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்:608/2017 ஆனது, கள்ளக்குறிச்சி வட்டம் விருகாவூர் கிராமத்தைச் சேர்ந்த 1)திருமதி.கலியம்மாள் 2)திரு.குமார் ஆகியோர்களின் பொது அதிகார முகவர் திரு.விக்னேஷ் என்பவர் அதே ஊரைச் சேர்ந்த திருமதி.மல்லிகா க/பெ ராஜேந்திரன் என்பவருக்கு வீரசோழபுரம் (மேற்கு) கிராம எல்லையில் உள்ள 5177 ¼ சதுரடி அடிமனையில் 2800 சதுரடி அளவுள்ள கீழ்தளம், முதல்தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் RCC மெத்தை கட்டிடத்தை ரூ.45,00,000/-க்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி ஆவணம் பதிவு செய்ய முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.1,90,000/-ம் இந்திய முத்திரை சட்டம் பிரிவு 41 ன் கீழ் ரூ.1,25,000/- ம் பத்திர பதிவு அன்று செலுத்தியுள்ளார்.

மேற்கண்ட சொத்தில் உள்ள கட்டிடத்தை பதிவுத்துறை உதவி செற்பொறியாளர் திரு.ம.மகேஸ்நாகராஜன் அவர்கள் மதிப்பு கணக்கீடு செய்து கள ஆய்வு அறிக்கை எண்.1087 உ.செ.பொ./17 நாள்.25.04.2017 ன்படி கட்டிடத்தின் அடிமனை மதிப்பு நீங்களாக ரூ.67,12,069/- என்று ஆய்வறிக்கை சமர்ப்பித்துள்ளார். மேற்படி தொகைக்கான முத்திரைக்கட்டணத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் செலுத்தாத நிலையில் ஆவணம் இ.மு.சட்டப்பிரிவு 47A(1) ன்படி குறைவு முத்திரை தீர்வை ரூ.2,63,578/- வசூல் செய்யும் பொருட்டு சார் பதிவாளர் அலுவலக கடித எண்.3/2017 ன்படி தனித்துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தை பார்வையிட்ட அப்போதைய தனி வட்டாட்சியர் (முத்திரைத்தாள்) எதிரி 2 திரு.வெ.சுந்தர்ராஜன் அவர்கள் 5177 ¼ சதுரடி சொத்தின் மதிப்பு ரூ.15,53,325/- என்றும் கட்டிட மதிப்பு ரூ.30,00,000/- என்றும் மொத்த சொத்தின் மதிப்பு ரூ.45,53,325/- என்றும் செலுத்த வேண்டி முத்திரைத் தீர்வை ரூ.3,18,733/- என்றும் ஏற்கனவே ரூ.3,15,000/- செலுத்தியுள்ள நிலையில் மீதம் ரூ.4000/- குறைவு முத்திரை தீர்வை வசூல் செய்ய வேண்டும் என்று 15.11.2019ந் தேதி

18/12/25

ஆய்வறிக்கை சமர்பித்துள்ளார். தனி வட்டாட்சியர் திரு.வெ.சுந்தர்ராஜன் அவர்களின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் அப்போதைய தனித்துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) திருமதி.ப.செல்வராணி அவர்கள் சி.ப.எண்.328/17-18 ன்படி ஆணை பிறப்பித்தும் சார் பதிவாளர் தியாக துருகம் அவ்ர்களுக்கு குறைவு முத்திரை கட்டணம் ரூ.4000 வசூலிக்கப்பட்டது என்றும், அசல் ஆவணத்தை முறையே கிரைய தாரர்களுக்கு வழங்கிட 18.11.2019 நாளிட்ட கடிதத்தின்படி அசல் ஆவணம் கிரையதாரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பத்திர பதிவில் உதவி செயற்பொறியாளர் அவர்களால் ரூ.67,12,069/- என மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடத்தை அப்போதைய தனி வட்டாட்சியர் (முத்திரைத்தாள்) எதிரி-2 திரு.வெ.சுந்தர்ராஜன் அவர்கள் ரூ.30,00,000/- என குறைத்து மதிப்பீடு செய்ததால் ரூ.37,12,069/- (67,12,069 - 30,00,000) அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

குற்றச்சாட்டு-10 - ஆவண.எண்.1207/2021 – எலவனாசூர்கோட்டை சார் பதிவாளர் அலுவலகம்

கடந்த 23.03.2021ந் தேதி எலவனாசூர்கோட்டை சார் பதிவக புத்தக ஆவண எண்:1207/2021 ஆனது, கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டம் கூத்தனூர் கிராமத்தில் வசிக்கும் மஞ்சமுத்து உடையார் குமாரர் ராமலிங்கம், பச்சையம்மாள் க/பெ ராமலிங்கம், உமா மகேஸ்வரி க/பெ வேல்முருகன் ஆகியோர்களுக்கு சொந்தமான கூத்தனூர் கிராம எல்லையில் அயன் புஞ்சை சர்வே.எண்.123/5B -ல் 80 ½ சென்ட் விவசாய நிலம், கிணறு, மின்மோட்டார், வைப்பு தொகை மற்றும் 2 ¼ மற்றும் 3 ¼ சென்ட் விவசாய பாதையும் மற்றும் சர்வே எண்.123/3-ல் 55 ½ சென்ட் விவசாய நிலம் ஆகியவற்றை கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டம் எறையூர் கிராமத்தில் வசிக்கும் பழையவீடு ஜோசப் அந்தோணி ஆரோக்கியராஜ் மனைவி ஜாஸ்மின் குளோரியா ராணி என்பவருக்கு

18/12/25

ரூ.5,17,000/- க்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி ஆவணம் பதிவு செய்ய முத்திரை தீர்வை கட்டணமாக ரூ.36,200/- செலுத்தியுள்ளார்.

மேற்கண்ட சொத்திற்கான அரசு வழிகாட்டு மதிப்பின்படி சதுரடி ரூ.47/- என உள்ளதால் மொத்தம் 61694 சதுரடி நிலத்திற்கும் மொத்த மதிப்பு ரூ.28,99,618/- என நிர்ணயம் செய்து இ.மு.சட்டப்பிரிவு 47A(1) ன்படி குறைவு முத்திரை தீர்வை ரூ.1,66,800/- வசூல் செய்யும் பொருட்டு அப்போதைய எலவனாசூர்கோட்டை சார் பதிவாளர் திரு.இரா.தெய்வமணி அவர்கள் எலவனாசூர்கோட்டை சார் பதிவாளர் அலுவலக வரிசை எண்.1/2021 ன்படி தனித்துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்படி சொத்து குறித்து கூட்டு புல தனிக்கை செய்த அப்போதைய தனி வட்டாட்சியர் (முத்திரைத்தாள்) திரு.வி.சுந்தர்ராஜன் மற்றும் தனித்துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) திரு.ஜெ.ஜெயக்குமார் ஆகியோர்கள் மேற்படி நிலத்திற்கு கடலூர் தனித்துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) சி.ப.எண்.87/2021, நாள் 26.03.2021 ன்படி சென்ட் ரூ.5,000/- என நில மதிப்பு நிர்ணயம் செய்தும் அதற்குண்டான குறைவு முத்திரை தீர்வை ரூ.13,400/-ஐ 03.04.2021ந் தேதி வசூல் செய்து அசல் ஆவணம் சார் பதிவாளர் எலவனாசூர்கோட்டை அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆவணத்திற்கு 08.04.2021 ந்தேதி குறைவு பதிவுக்கட்டணம் ரூ.7700/- சார் பதிவாளர் எலவனாசூர்கோட்டை அவர்களால் ஆவணதாரரிடமிருந்து வசூல் செய்யப்பட்டு அசல் ஆவணம் ஆவணதாரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி எதிரி-2 தனி வட்டாட்சியர் (முத்திரைத்தாள்) திரு.வெ.சுந்தர்ராஜன் மற்றும் தனித்துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) மற்றும் எதிரி-1 திரு.ஜெ.ஜெயக்குமார் ஆகியோர்களின் கூட்டு ஆய்வறிக்கையில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டி மதிப்பிலேயே ஒரு சதுரடி மதிப்பு ரூ.47/- என இருப்தை கருத்தில் கொள்ளாமல் விவசாய நிலமாக சென்ட் மதிப்பீட்டில் ஒரு சென்ட் ரூ.5,000/- என குறைத்து மதிப்பீடு செய்துள்ளார்கள்.

18/12/25

மேலும் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அந்த நிலத்தில் அமைக்கப்பட்டிருந்த கிணறு மற்றும் மின் இணைப்பு வைப்புத் தொகை, மின் மோட்டார் ஆகிய இதர சொத்துக்களின் மதிப்பையும் சேர்த்தே மதிப்பீடு செய்திருக்கவேண்டும் அவ்வாறு முறையாக மதிப்பீடு செய்திருந்தால் குறைவு முத்திரைத் தீர்வையாக ரூ.1,93,138 வசூலிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் எதிரி-1 மற்றும் எதிரி-2 ஆகியோர் ஆவணதாரர்களுக்கு சாதகமாக முத்திரை தீர்வை கட்டணத்தை குறைத்து நிர்ணயம் செய்து சி.ப.எண்.87/2021, நாள் 26.03.2021 ன்படி ஆணை பிறப்பித்துள்ளனர். இதனால் அரசுக்கு முத்திரைத் தீர்வை கட்டணமாக சேரவேண்டிய பணம் ரூ.1,79,738 இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

மேற்கூறிய சங்கதிகள் பிடிக்கக் கூடிய குற்றங்களாகிய அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அரசை ஏமாற்றும் நோக்கத்தோடு ஆவணத்தை தவறாக உருவாக்குவது, பொய்யான ஆவணம் புனைதல், பொய்யாக புனைந்த ஆவணத்தை நேர்மையன்றி உண்மையான ஆவணம் போல் பயன்படுத்துதல், பொது ஊழியர் குற்றமுறு கெட்ட நடத்தையில் ஈடுபடுவது, அரசை ஏமாற்றி நிதி ஆதாயம் அடைந்தது போன்ற குற்றங்கள் நடந்திருப்பதற்கான அடிப்படை ஆதாரங்கள் உள்ளது என தெரிய வருகிறது.

எனவே, நான் இன்று 18.12.2025 ஆம் தேதி 18.00 மணிக்கு, மேற்படி எதிரிகள் மீது, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண். 13/2025 ன்படி எதிரிகள் 1 மற்றும் 2 க்கு எதிராக சட்டப்பிரிவுகள் 420, 468, 471 இ.த.ச - படியும், 1988 ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்டம் (திருத்தம் 2018) பிரிவு 13(1) (a) r/w 13(2) ன் படியும் வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

18/12/25

(கு. சுந்தரராஜ்)
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு (மு) கண்காணிப்பு பிரிவு
கடலூர்.